உ

கடவுள்துணை.

# அடுக்குநிலை போதம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதறாஸ், என். சி.

ஜோன்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதறாஸ் என். சி.

102

# விளம்பரம்.

## சாதகாலங்காரம்,

### மூலமும் - உரையும்.

இச் சென்னையின்கண் முன்னோர்கள் அருளிச்செய்த பல சோதிட நூல்கள் உள்ளன. அவற்றுள் இரண்டொரு நூற்களே மிக்க பயன்படத்தக்கவைகளும், வரிசைக்கிரமமாகச் செய்யப்பட்டவையுமாகும். அப்படிப்பட்டவற்றுள் சாதகாலங்காரம் என்பதுஎன்று அதற்கு இதுவரைக்கும் உரையில்லாத பெருங்குறையை நோக்கிப் பலரும் என்னை வற்புறுத்தியபடியால் அதற்குத் தக்கவாறு உரையெழுதி பன்னிரண்டு பாகங்களும் நன்றாய் விளங்கும்படி விளக்கி அச்சிட்டிருக்கின்றோம். வேண்டியவர்கள் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா 1 8 0

உ

கடவுள் துணை.

# அடுக்குநிலை போதம்.

---

## நூல்.

சொல்லிறந்தவிடமெங்கே முப்பாழெங்கே
துவாரபாலகரெங்கே முதற்பாழெங்கே
நல்லசங்குநதியெங்கே வைகுந்தமெங்கே
நாரணனும்ஆலிலைமேற் படுத்ததெங்கே
அல்லல்படும்ஐம்பூத மொடுக்கமெங்கே
ஆறஞ்சுயிதழ்ரெண்டு முளைத்ததெங்கே
சொல்லவல்லாருண்டானு லவரைநாமும்
தொழுதகுருவெனப்பணிந்து வணங்கலாமே. ()

உந்தியெனுநிலையெங்கே அறுகோணமெங்கே
ஓங்காரநிலையெங்கே வுற்றவிடமுமெங்கே
மந்திரமுஞ்சாத்திரமும் பிறந்ததெங்கே
மறைநாலும்விரித்தவயன் தானுமெங்கே
முந்திவருங்கணபதியும் பிறந்ததெங்கே
முக்கோணமுனையெங்கே யடிதானெங்கே
இந்தவகைபொருளறிந்து சொல்வார்தம்மை
யிறையவனென்றேகருதி யியம்பலாமே. (உ)

பற்பதத்திபொங்கிவரும் வழிதானெங்கே
பரிந்துமுறைகொண்டுநின்ற அறிவுமெங்கே
உற்பனமாங்கருநின்று விளைந்ததெங்கே
யொருபாதந்தாக்கிநின்ற வடையாளமெங்கே
தற்பரமாயாகிநின்ற நிலைதானெங்கே
சாவவுயிராயெடுத்த சிவனுமெங்கே
இப்பொருளையறிந்துரைக்கும் பெரியோர்தம்மை
யிறையவனென்றேகருதி யியம்பலாமே. (௩)

அடிமுடியுநடுவான நிலையுமெங்கே
அறுசுவையுங்கொண்டொளித்த விடமுமெங்கே
வடிவானவைந்தலை மாணிக்கமெங்கே
வரையானவூமையெனு மெழுத்துமெங்கே
இடமாகவூடிநின்ற பாதமெங்கே
இச்சையுடன்பேசிநின்ற எழுத்துமெங்கே
யடைவாயிப்பொருளறிந்து சொல்வார்தம்மை
யடிதொழுதுகுருவென்று நம்பலாமே. (ச)

சற்குருவுஞ்சந்நிதியு மானதெங்கே
சாகாதகரலெங்கே வேகரத்தலையுமெங்கே
முப்பொருளுமொருபொருளாய் நின்றதெங்கே
முனையெங்கேதலையெங்கே முகமுமெங்கே
நற்கமலமாயிரத்தெட் டிதழுமெங்கே
நாலுகையொருபாத மானதெங்கே
இப்பொருளையறிந்துரைக்கும் பெரியோர்தம்மை
யிறையவனென்றேகருதி யிபம்பலாமே. (ரு)

நஞ்சணிந்தாமுகந்தர னைந்துமெங்கே
ஞானக்கண்மற்றக்கண் மூன்றுமெங்கே
அஞ்சவுயிர்தனைக்கொடுக்கும் யேமனெங்கே
வாயிரக்கண்ணிந்திரனூர் தாமுமெங்கே
பஞ்சரிவாய்நின்றபரா சத்தி யங்கே
பதினாலுலோகமனு மதுதானெங்கே
வஞ்சமறப்பொருளறிந்து சொல்வாராகில்
வணங்கிகுருபரனென்று வாழ்த்தலாமே. (௬)

நகைபிறந்தவிடமெங்கே கோபமெங்கே
நரகமேழாநரக மானதெங்கே
திகைத்துமறந்திடமெங்கே நினைப்புமெங்கே
தீராதகுறைவந்து சூழ்ந்ததெங்கே
பகைத்தவிடந்தானெங்கே ஒழுக்கமெங்கே
பகலிரவுயிருந்தவிடந் தானுமெங்கே
வகைபொருளையறிந்துரைக்கும் பெரியோர்தம்மை
வணங்கிகுருபரனென்று வாழ்த்தலாமே. (௭)

ஆறுகால்முகமாறு மானதெங்கே
அறுபத்துநாலுகலை நின்றதெங்கே
சீறுகால்பனிரெண்டிற் கழிந்ததெங்கே
செத்திடமுஞ்சாகா திருந்திடமுமெங்கே
பூருவம்நீயிருந்துவந்து பிறந்திடங்காணெங்கே
புந்திதனிலன்பத்தோ ரட்சரமுமெங்கே
வேறுபொருளுரையா துள்ளபடியேசொல்வார்
மெல்லடியிலேபணிந்து மெலியலாமே. (அ)

ஆதிகதிற்சந்திரனும் பிறந்ததெங்கே
அவரொடுங்கிநிற்குமது விடமுமெங்கே
சாதிபலவொன்றாகக் கண்டதெங்கே
சத்திசிவமென்றுபிரி யாததெங்கே
ஓதியுணர்ந்தபூசை மறந்ததெங்கே
வுச்சிட்டநிட்டத்தே விடமுமெங்கே
சோதிபோல்ஞானமொழி பெற்றபேர்கள்
சொல்லியதெல்லாமுடலிற் சொல்லுவாயே. ()

இருள்பிறந்தவிடமெங்கே ஒடுங்கிடமுமெங்கே
யிரண்டுதிருசங்குநின்ற விடமுமெங்கே
அருள்பிறந்துபாடிநின்ற விடமுமெங்கே
அறுத்தடைந்தவாசலொன்று கண்டதெங்கே
திருபிறந்தவிடமெங்கே எழுகிணறுமெங்கே
திருக்கிணத்தையெறைக்கின்ற எத்தமெங்கே
விருப்பமுடனடுக்கு நிலைபோதத்தை
விளம்பினேம்மெஞ்ஞான அறிவுள்ளோர்க்கே. (௰)

அடுக்குநிலை போதம்,

முற்றிற்று.

---